**வருகின்ற 2019-ம் ஆண்டு ஜூலை மாதம் 19.07.2019-ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திரு.A.ஜஹாங்கீர் பாஷா, பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

1. பவானி நகராட்சி - பொது சுகாதாரம் - இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதார பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்:101 (ந.நி.கு.வ.துறை), நாள்: 30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும். ஆனால், இந்நகராட்சியில் தற்போது 54 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 1320/எச்1/2016, நாள்: 27.11.2018ன் படி, திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இந்நகராட்சிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் 60 துப்புரவு பணியாளர்களை M/s Relyon Facility Services Private Ltd, Chennai நிறுவனத்திடமிருந்து பெற்று துப்புரவு பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் 60 பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட முதன்மை அனுமதியின் காலம் 31.07.2019-ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் 01.08.2019-ஆம் தேதி முதல் மேற்படி 60 துப்புரவு பணியாளர்களை தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு வெளிப்பணி முறையில் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள மன்ற தீர்மான எண்: 122, நாள்: 31.05.2019ன் வாயிலாக ஒப்புதல் அளித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் ந.க.எண்: 361/2019/எச்1, நாள்: 20.06.2019ஆம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பரிந்துரைக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 1320/எச்1/2016, நாள்: 27.11.2018ன் படி, மேற்படி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி பணி மேற்கொள்ள இந்நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் வழங்கப்பட்ட அனுமதியின் காலம் எதிர்வரும் 31.07.2019-ஆம் தேதிவரை உள்ளது.

இந்நிலையில், M/s Relyon Facility Services private Ltd, Chennai அவர்களின் கடிதத்தின் வாயிலாக 01.08.2019-ஆம் தேதியுடன் முடிவடைகின்ற ஒப்பந்த பணியினை மேலும் மூன்று மாத காலத்திற்கு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 1320/எச்1/2016, நாள்: 27.11.2018ல் குறிப்பிட்டுள்ள அதே நிபந்தனைகள் மற்றும் Terms and Conditions-க்கு உட்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.544/- என்னும் விலைவிகிதத்தில் தொடர்ந்து பணியாளர்களை வழங்கி பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து சம்மதக் கடிதம் இந்நகராட்சிக்கு வழங்கியுள்ளார்.

இந்நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்: 675/19/எச்1, நாள்: 04.06.2019ல் காணும் விபரப்படி, அரசாணை நிலை எண் 101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 30.04.1997-ன் குறியீட்டின் படி இந்நகராட்சிக்கு மொத்தம் தேவையான துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும். தற்போது நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 54 பேருடன் 60 துப்புரவுப் பணியாளர்கள் வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் பணிபுரிவதால் முழு அளவில் துப்புரவுப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (NGT) வாயிலாக 100 சதவீதம் குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து 100 சதவீதம் அறிவியல் முறைப்படி Final Disposal செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு தற்போது இந்நகராட்சியில் மேற்குறிப்பிட்டவாறு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, இந்நிலையில் நகரின் சுகாதாரப்பணிகள் தங்கு தடையின்றி நடைபெற வேண்டியது அத்தியாவசியமாகிறது.

மேலும், தற்போது மழைக்காலம் தொடங்கி உள்ளதன் நிலையில் டெங்கு காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் நகரில் பரவாமல் தடுக்க சுகாதாரப் பணிகளை திறம்பட மேற்கொண்டு நகரின் சுகாதாரத்தினை நல்ல முறையில் பராமரிக்க வேண்டியது நகராட்சியின் முக்கிய பொறுப்பாகும் என்பதால் தற்போதுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு மேற்படி சுகாதார பணிக்கான ஒப்பந்தகாலத்தை 01.08.2019ம் தேதி முதல் 31.10.2019 வரை நீட்டிப்பு செய்து தொடர்ந்து பணி கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.30.03-ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம்அனுமதிக்கலாம் (ந.க.எண்.1320/2016/எச்1)

2. இந்நகராட்சி வாகனம் TN36 D4020 வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பித்தல் பணிக்கு வாகனத்தின் இருபுறமும் இருப்பிலான கிரில் மற்றும் பின்புறம் பம்பர் வைத்து தரும் பணிக்கு 18/7/2019 ஆம் தேதி விலைப்புள்ளி பெறப்பட்டதன் விபரம் பின் வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | திரு.ப.செந்தில்குமார் கிரில் ஒர்க்ஸ், 16, வர்ணபுரம் 3வது வீதி, பவானி | ரூ.4250/- |
| 2 | m/s.செல்லியாண்டியம்மன்,இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 581,லோகநாதன் ஆஸ்பிடல் பின்புறம், பவானி. | ரூ.4200/- |
| 3 | திரு.ஜெய்சுந்தர் ஜெய்லேத் ஒர்க்ஸ், வர்ணபுரம்3வது வீதி, பவானி. | ரூ.4550/- |

மேற்காணும் விபரப்படி பெறப்பட்ட விலைவிகிதங்களில் வ.எண்.2-ல் குறிப்பிடப்பட்ட m/s செல்லியாண்டியம்மன் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,பவானி அவர்களின் விலைவிகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 20/2019/எச்1)

3. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவைப்படும் கிருமிநாசினிகளான நீர்த்த சுண்ணாம்புத்தூள், கருப்பு பினாயில், வெள்ளை பினாயில்,பிளிச்சிங்பவுடர் மற்றும் கிளீனிங் ஆசிட் போன்றவைகளை விநியோகம் செய்ய Tamilnadu multipurposeindco Serve, Trichy அவர்களால் கடிதம் அனுப்பப்பட்டு விலை விகிதம் குறித்த விபரங்களையும் தெரிவித்து உள்ளார்கள்.

<u>விலைவிகிதம்</u>

| 1 | | Qty | Rate Rs.P | GST% | GST Rate | Total Rs.P |
|---|---|---|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்புத்தூள் Hydrated lime powder | 1Kg | 9.70 | 5% | 0.48 | 10.18 |
| 2 | பிளிச்சிங் பவுடர் Grade (II) Bleaching Powder Gr-II | 1kg | 45.00 | 18% | 8.10 | 53.10 |
| 3 | கருப்பு பினாயில் ( Block Phenyl | 1 litre | 70.00 | 18% | 12.60 | 82.60 |
| 4 | வெள்ளை பினாயில் (வாசனை) ( White Phenyl Cented) | 1 litre | 47.00 | 18% | 8.46 | 55.46 |
| 5 | கிளீனிங் ஆசிட் ( Cleaning Acid) ( Floor & Toilet use) | 1 litre | 58.00 | 18% | 10.44 | 68.44 |

ஆதலால் 01.08.2019 முதல் 31.03.2020 வரை மேற்காணும் விலை விகிதத்தில் மேற்காண் நிறுவனத்தில் தேவைக்கேற்ப அவ்வப்போது நேரடியாக பெற்றுக் கொண்டு பணி மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.2,50,000/-ற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.309/2019/எப்1)

4. பொது சுகாதாரப்பிரிவில் உலர்கழிவுகளை கித்தான் சாக்கு பைகளில் சேகரித்து மறு சுழற்சி மற்றும் இதர பயன்பாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் பணிகளுக்கு பயன்படுத்திட தேவையான கித்தான் சாக்குப்பைகள் விநியோகிக்க ஒப்பந்தப்புள்ளிகள் 16.07.2019 ஆம் தேதி பெறப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியின் விபரம்

| | | |
|---|---|---|
| 1.எஸ். பாலசுப்பிரமணியன், 43,பழனிபுரம் 3வது வீதி, பவானி | 1)25kg கொள்ளளவு கொண்ட கித்தான் சாக்குபை ஒன்றிற்கு<br>2)40.50kg கொண்ட கித்தான் சாக்குப்பைகள் ஒன்றிற்கு | ரூ.5/-<br>ரூ.16/- |
| 2.P.A.செல்லப்பன் 49,பழனிபுரம்3வது வீதி,பவானி. | 1)25kg கொள்ளளவு கொண்ட கித்தான் சாக்குபை ஒன்றிற்கு<br>2)40.50kg கொண்ட கித்தான் சாக்குப்பைகள் ஒன்றிற்கு | ரூ.7/-<br>ரூ.17/- |

மேற்கண்டஇரு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1-ல் கண்டுள்ள m/s எஸ். பாலசுப்பிரமணியன் 43, பழனிபுரம் 3வது வீதி பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் வழங்கலாம். ( ந.க.எண். )

5. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி இந்நகராட்சியிலுள்ள 27 வார்டுகளிலும் தினமும் சேரும் எலக்ட்ரானிக்ஸ் கழிவுகளை (EWastes) தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்திடம் அங்கீகரிக்கப்பட்ட எலக்ட்ரானிக் கழிவுகள் மறுசுழற்சி நிறுவனத்திடம் ஒப்படைத்து அகற்றப்பட வேண்டும்.

எனவே இந்நகராட்சியின் Ewaste களை TNPCP யினரால் அங்கீகரிக்கப்பட்ட இந்நகராட்சிக்கு அருகிலுள்ள Green India Recylers Kovai நிறுவனத்திடம் அவ்வப்பொது இந்நகராட்சியில் சேரும் EWaste கழிவுகளை ஒப்படைக்கவும், மேற்படி நிறுவனத்திற்கு கிலோ 1க்கிற்கு ரூ.35/- வீதம் தொகை செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 924/2019/எச்1)

6. பவானி நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனங்கள் மற்றும் புகைத்தெளிப்பான் இயந்திரங்களுக்கு தேவையான டீசல், பெட்ரோல், ஆயில், கிரீஸ் போன்றவைகளை நிர்வாக நலன் கருதி ஸ்ரீவெங்கடேஸ்வரா ப்யூல்ஸ் (ADHOC) பவானி என்னும் ஏஜென்ஸிடமிருந்து 01.08.2019 முதல் 31.03.2020 வரை பெற்றுக்கொள்ளவும், அதற்கான தோராயமான செலவினம் 15 இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0154/2018/எச்1)

7. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு உலர்கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்த தேவையான கித்தான் சாக்கு பைகள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் குறைவான விலைவிகிதம் வழங்கிய எஸ். பாலசுப்பிரமணியன் 43, பழனிபுரம் 3வதுவீதி , பவானி என்பவரிடம் விநியோகம் செய்ய உத்திரவிடப்பட்டு 25 கிலோ கொள்ளளவு கொண்ட கித்தான் சாக்கு பை ஒன்று ரூ.5/ மற்றும் 40.50 கிலோ கொண்ட பை ஒன்று ரூ.16/- என்னும் விலை விகிதத்தில் வாங்கி பயன்படுத்தியதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

(ந.க.எண்.801/2019/எச்1)

8. இந்நகராட்சி பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ள கட்டிடங்களுக்கு Stickers ஒட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1695/2019/அ3 நாள்:24.06.2019-ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைக்காமல் உள்ள கட்டிடங்களை சீரமைக்கவும் வேண்டி அனைத்து வரி விதிப்பு தாரர்களுக்கும் மற்றும் அரசு கட்டிடங்களுக்கும் அறிவிப்புகள் வழங்கவும் மழைநீர் சேகரிப்பு குறித்த விளம்பரங்களை அனைத்து கட்டிடங்களுக்கும் ஸ்டிக்கர்கள் மூலம் தெரியப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினம் ரூ.2,00,000/- ஐ வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 819/2019/எப்1)

9. பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தவும் ஏற்கனவே உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை மராமத்து பணி செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 135 நாள்: 31.05.2019 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 04.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு. S.A. செல்லப்பன் | 0.10% | மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு. S.பாலசுப்பிரமணியன் | 1.22% | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்ட விகிதத்தை விட 0.10% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S.A. செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண். 670/2019/இ1 )

10. பவானி நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணிணிகள், ஸ்கேனர், பிரிண்டர்கள் மற்றும் நகல் இயந்திரம், UPS ஆகியவை ஆண்டு பராமரிப்பு செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.1.20 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 105 நாள்: 28.02.2019 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 04.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர் ஸ்பைடர் டெக்னாலஜி சேலம். | 0.37% | மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர் வீனஸ் டெக் சேலம். | 1.48% | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்ட விகிதத்தை விட 0.37% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் ஸ்பைடர் டெக்னாலஜி சேலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண். 230/2019/இ1 )

**வருகின்ற 2019-ம் ஆண்டு ஜூலை மாதம் 29.07.2019-ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திரு.A.ஜஹாங்கீர் பாஷா, பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

1. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் அவ்வப்போது தேவைக்கேற்ப JCB பணிகளை மேற்கொள்ள JCB வாகனம் ஒரு மணி நேரப்பணி அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 2018-19 ஆம் ஆண்டில் ரூ.2,00,000/- ற்கு பணி மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி பெற்று ரூ.64983/- மட்டுமே செலவிடப்பட்டு உள்ளது.

இந்நிலையில் m/s பச்சியம்மன் எர்த் மூவர்ஸ், பவானி அவர்கள் 01.08.2019 ஆம் தேதி முதல் 31.03.2020 வரை ஏற்கனவே இந்நகராட்சிக்கு JCB வாகனம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.935/-ற்கு வழங்கி பணி மேற்கொள்வதைப்போன்று தொடர்ந்து வழங்க சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கி உள்ளார்கள். எனவே 01.08.2019 முதல் 31.03.2020 வரையிலான காலத்தில் தேவைக்கேற்ப JCB வாகனத்தினை m/s பச்சியம்மன் எர்த் ஒர்க்ஸ், பவானி அவர்களிடம் பெற்று பணி மேற்கொள்ளவும் 2018-2019 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டு மீதமுள்ள தொகையில் செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.310/2017/எச்1)

2. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் மேற்கொண்டு வரும் பணிகளுக்கு தேவையான விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் 2018-19 ஆம் ஆண்டில் "9X12" சைசில் ஆயிரம் பிரதிகள் ரூ.980/- என்றும் விலைவிகிதத்தில் m/s ராஜகணபதி ஆப்செட் பிரிண்டர்ஸ், 37 பழனியாண்டவர் கோவில் தெரு, பவானி அவர்களிடம் பெற்று கொள்ள மன்ற அனுமதி பெற்று மொத்த செலவினம் ரூ.40000/- ற்கு மன்ற அனுமதி பெற்று ரூ.9800/- மட்டுமே செலவிடப்பட்டு மீதம் 30200/- தொகை செலவு மேற்கொள்ளப்படாமல் உள்ளது.

இந்நிலையில் M/s ராஜகணபதி ஆப்செட் பிரிண்டர்ஸ், பவானி அவர்கள் 01.08.2019 முதல் 31.03.2019 வரை ஏற்கனவே வழங்கி வரும் விலை விகிதமான ஆயிரம் பிரிதிகளுக்கு 980/- என்னும் விலை விகிதத்திலேயே தொடர்ந்து பிரசுரங்கள் தயார் செய்து வழங்க கடிதம் மூலம் சம்மதம் தெரிவித்து உள்ளார்.

எனவே மேற்படி நிறுவனத்திடமிருந்து 01.08.2019 முதல் 31.03.2020 வரை அதே விலைப்புள்ளி விலை விகிதத்தில் விழிப்புணர்வு பிரதிகள் அச்சடித்து கொள்ளளவும் கடந்த ஆண்டில் உள்ள மீதமுள்ள தொகையாக ரூ.30200/-ற்குள் செலவு செய்து கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண்.312/2017/எச்1)

3. இந்நகராட்சியின் 2015-16ஆம் ஆண்டு முதல் 2017-18 வரை செலுத்தப்பட வேண்டிய சேவை வரி தொகை ரூ.16,23,918/-ஐ செலுத்தக் கோரி மத்திய கலால் மற்றும் சுங்க வரித்துறையிலிருந்து வரப்பெற்ற ஆணைக்கு எதிராக சென்னைஉயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. (மேல்முறையீட்டு எண். 163/2019) மேல்முறையீடு செய்யப்பட்டதற்காக வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15000/- செலுத்துமாறு Advocate திரு.என். பிரசாத் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகை ரூ.15000/-ஐ வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்கவும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு:

1. அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதி பெற்று
   தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 1021/2019/அ2)

4. பவானி நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் கீழ்கண்ட அங்கன்வாடி மையங்கள் இயங்கி வருகின்றது. இக்கட்டிடங்களில் பழுது பணிகள் பார்க்க வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6,00,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. காமராஜ் நகர்
2. சொக்காரம்மன் நகர்
3. பெரக்கா நகர் ( திருவள்ளுவர் நகர்)
4. பழனிபுரம்
5. அரிசிமண்டி ( பசுவேஸ்வரர் நகர்)
6. தேவபுரம்

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. கல்வி நிதி 2019-20 -ல் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.848/2019/இ1)

5. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் மேற்கொண்டுவரும் பணிகளுக்கு விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டுகள் 2018-19 ஆம் ஆண்டில் சதுர அடி ஒன்றுக்கு ரூ.27/- என்னும் ஒப்பந்த விகிதத்தில் திரு.A.ரவிக்குமார் பவானி அவர்களிடம் பணி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. இதற்கான ரூ.100000/- மன்ற அனுமதி பெறப்பட்டு ரூ.70619/- மட்டும் செலவிடப்பட்டது.

இந்நிலையில் m/s ஏ.ரவிக்குமார் அவர்கள் 01.08.2019ஆம் தேதி முதல் 31.03.2020 வரை ஏற்கனவே வழங்கி வரும் சதுர அடி ஒன்றுக்கு ரூ.27/- என்னும் விலை விகிதத்தில் தொடர்ந்து பணி செய்த தர சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கி உள்ளார்கள். எனவே 01.08.2019 முதல் 31.03.2020 வரையிலான காலத்தில் தேவைக்கேற்ப பிளக்ஸ் போர்டுகளை திரு. ஏ.ரவிக்குமார் பவானி அவர்களிடம் அதே விலைவிகிதத்தில் பெற்றுக்கொள்ளவும் 2018-19 ஆம் ஆண்டில் உள்ள மீதமுள்ள தொகை ரூ.29381/- ற்குள் செலவு செய்து கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.311/2019/எச்1)